RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 138 | மே.24, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## வர்த்தகம் முதல் சுற்றுலா வரை வடகிழக்கு மாநிலங்கள் பன்முகத்தன்மை கொண்டவை: பிரதமர் மோடி




புதுடெல்லி: மே.24-

வர்த்தகம் முதல் பாரம்பரியம் வரை, ஜவுளி முதல் சுற்றுலா வரை, வடகிழக்கு மாநிலங்கள் இந்தியாவின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட பகுதி என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற ரைசிங் வடகிழக்கு உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "நமது இந்தியா உலகின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட நாடு என்று அழைக்கப்படுகிறது. நமது வடகிழக்கு மாநிலங்கள் இந்த நாட்டின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட பகுதியாகும். வர்த்தகம் முதல் பாரம்பரியம் வரை, ஜவுளி முதல் சுற்றுலா வரை, அதன் பன்முகத்தன்மை அதன் மிகப்பெரிய பலம்

வடகிழக்கு என்றால், உயிரியல் பொருளாதாரம், மூங்கில், தேயிலை உற்பத்தி, பெட்ரோலியம், விளையாட்டு மற்றும் திறன், சுற்றுச்சூழல் சுற்றுலா, கரிமப் பொருட்கள் ஆகியவற்றுக்குப் பெயர் போன பகுதி. அதோடு, வடகிழக்கு என்றால் ஆற்றல் மையம். அதனால்தான் வடகிழக்கு நமது அஷ்டலட்சுமிகள். அஷ்டலட்சுமியின் ஆசியுடன், வடகிழக்கில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் "நாங்கள் முதலீட்டிற்குத் தயாராக இருக்கிறோம், நாங்கள் தலைமைத்துவத்திற்குத் தயாராக இருக்கிறோம்." என்று கூறுகிறது.

வளர்ந்த இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்கு, கிழக்கு இந்தியாவின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது. மேலும் வடகிழக்கு, கிழக்கு இந்தியாவின் மிக முக்கியமான பகுதியாகும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்த கிழக்கு என்பது ஒரு திசையை மட்டும் குறிக்காது. எங்களுக்கு, இதன் பொருள் அதிகாரமளித்தல், செயல்படுதல், வலுப்படுத்துதல் மற்றும் மாற்றுதல் என்பதாகும். இது கிழக்கு இந்தியாவிற்கான எங்கள் அரசாங்கத்தின் கொள்கை." என தெரிவித்தார்.

பிரதமர் மோடி தொடங்கி வைத்த ரைசிங் வடகிழக்கு முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு, மே 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பாரத் மண்டபத்தில் நடைபெறும். இந்த உச்சிமாநாடு வடகிழக்கு பிராந்தியத்தை வாய்ப்புகளின் பூமியாக முன்னிலைப்படுத்துவதையும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு முதலீட்டை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொல்லியல், வரலாற்று சின்னங்களை பாதுகாக்க புதிய ஆணையம்: முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு திட்டம்




புதுடெல்லி: மே.24-

தமிழ்நாட்டில் உள்ள தொல்லியல், வரலாற்று சின்னங்கள், கட்டிடங்களை பாதுகாக்க புதிய ஆணையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றின் பராமரிப்புக்காக, பட்ஜெட்டில் தனியாக நிதி ஒதுக்கவும் முதல்வர் ஸ்டாலின் அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை உருக்கும் தொழில்நுட்பம் இருந்துள்ளது என கடந்த ஜனவரியில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார். தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியதாகவும் பெருமிதமாக தெரிவித்தார். இந்நிலையில், தமிழ்நாட்டிலுள்ள தொல்லியல், வரலாறு மற்றும் பாரம்பரியச் சின்னங்களை பாதுகாப்பதற்காக புதிதாக ஒரு ஆணையத்தை தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதில், பழங்காலச் சிலைகள், பாரம்பரியக் கட்டிடங்கள், அரசர்கள் கால ஆயுதங்கள் மற்றும் பாண்டங்கள் உள்ளிட்டவற்றின் தகவல்களை பதிவு செய்து ஆவணப்படுத்த உள்ளனர். கோயில்கள், மசூதிகள், கிறிஸ்தவ மற்றும் பவுத்தம் உள்ளிட்ட ஆலயங்கள் பற்றிய தகவலும் இந்த பதிவேடுகளில் இடம்பெற உள்ளன.

இவை அனைத்தையும் தமிழ்நாடு வருவாய் துறையின் கீழ் பதிவு செய்து அதை பாதுகாக்கும் பொறுப்பை புதிதாக அமையும் ஆணையம் செய்யும்படி அமைக்கப்பட உள்ளது. இதற்காக, அடுத்து வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு மசோதாவை தாக்கல் செய்யப்பட உள்ளது. இதற்கான பணியில் இந்தியா முழுவதிலும் உள்ள தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் தொல்லியல் பேராசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து வட மாநிலங்களில் உள்ள தமிழர்களான தொல்லியல் மற்றும் வரலாற்றின் மூத்த பேராசிரியர்கள் வட்டாரம் கூறும்போது, "'இதற்கான சட்ட முன்வடிவுகள், செயல்பாட்டு வரைவுகள் தயாரிக்கப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

இதில் பதிவு செய்பவை எங்கு உள்ளதோ அங்கேயே இருக்கும். அவற்றை அரசு கையகப்படுத்தாது. ஆனால், அவற்றின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை ஆணையம் செய்யும். இவற்றுக்கு சேதாரம் அல்லது திருட்டு போன்ற சட்டவிரோதப் பாதிப்பு ஏற்பட்டால், ஆணையம் தலையிட்டு நடவடிக்கைக்கு உத்தரவிடும்" என்றனர்.

இதுபோன்ற மாநில அளவிலான ஆணையம் நாட்டிலேயே மேற்கு வங்கத்தில் மட்டும்தான் உள்ளது. நகர அளவில் மகராஷ்டிராவின் தலைநகர் மும்பையில் செயல்படுகிறது. இந்த ஆணையங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்கு கீழ் உள்ள தொல்லியல், வரலாற்றுச் சின்னங்கள், கட்டிடங்களைய பாதுகாத்து வருகின்றன. ஏனெனில், இந்த இரு இடங்களிலும் ஆங்கிலேயர் காலத்தின் கட்டிடங்கள் அதிகம் உள்ளன.

இதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டிலும் ஒரு புதிய ஆணையம் அமைக்கப்பட உள்ளது. எனினும், மும்பை மற்றும் மேற்கு வங்க மாநிலத்தின் ஆணையங்களை விட சில கூடுதல் அம்சங்கள் புதிய ஆணையத்தில் இடம்பெற உள்ளன. இதில், அருங்காட்சியகங்களின் சிறிய பொருட்கள் முதல் கோயில்கள், புனிதத் தலங்கள் மற்றும் வக்பு வாரியங்களின் கீழ் உள்ள வரலாற்று சொத்துக்களும் பதிவு செய்யப்பட உள்ளன.

தமிழ்நாடு அரசு சார்பில் புதிய ஆணையம் அமைக்கப்பட்ட பின், அதில் பதிவாகுபவற்றை பராமரித்து, பாதுகாக்க நிதி ஒதுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டுதோறும் சட்டப்பேரவையில் தாக்கலாகும் பட்ஜெட்டில் தனியாக நிதி ஒதுக்கும் வாய்ப்புகளும் உள்ளன. இதற்கான அறிவிப்பை முதல்வர் ஸ்டாலின் தமிழகத்தில் விரைவில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கோவையில் மீண்டும் வானதி சீனிவாசன் கொடி! அண்ணாமலை மாற்றம் தந்த மாற்றம்

கோவை, மே.24-

ஒரு காலத்தில் கோவையில் வானதி சீனிவாசன் மட்டுமே பாஜகவின் அதிகார மையமாக இருந்தார். ஆனால், மக்களவைத் தேர்தலைக் குறிவைத்து அண்ணாமலை தனது அரசியல் செயல்பாடுகளை கோவைக்கு மாற்றியதும் மையம் இரண்டானது. கோவை பாஜகவில் அண்ணாமலை பாஜக, வானதி பாஜக என இரண்டு கோஷ்டிகள் ஆவர்த்தனம் செய்தன. இதனால் சில சங்கடங்களும் ஏற்பட்ட நிலையில், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வானதியும், அண்ணாமலையும் சாதுர்யமாக அரசியல் செய்தனர். இப்போது அண்ணாமலை மாற்றப்பட்டுவிட்டதால் மீண்டும் ஒன்மேன் ஆர்மியாகி இருக்கிறார் வானதி. பழையபடி கோவை பாஜக அவரைச் சுற்றியே நகர்கிறது.

பாஜக மகளிரணியின் தேசிய தலைவரான வானதி சீனிவாசன் 2021 சட்டமன்றத் தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசனை தோற்கடித்து பாஜக தலைமையின் கூடுதல் அபிமானத்தைப் பெற்றார். இந்த வெற்றிக்குப் பிறகு தனது செயல்பாடுகளை இன்னும் வேகப்படுத்திய வானதி, சட்டமன்றத்தில் கேள்விகளை எழுப்புவதிலும் கருத்துகளை பதிவு செய்வதிலும் திமுகவுக்கு சிம்மசொப்பனமானார்.

அதேபோல் கோவை மாவட்ட அரசியலை பொறுத்தவரை, தொழில் துறையினரின் பிரச்சினைகளை மத்திய அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்றதுடன் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களை கோவைக்கு அழைத்து வந்து தொழில்துறையினருடன் கலந்துரையாட வைத்தும் தனது இமேஜை உயர்த்திக் கொண்டவர் வானதி. ஆனால், இவை அனைத்துமே அண்ணாமலையின் கோவை வருகைக்கு முன்பு வரை தான். அண்ணாமலை கோவை பக்கம் திரும்பியதும், தொழில்துறையினரும் அவர் பக்கம் திரும்ப ஆரம்பித்தார்கள். வானதிக்கான அரசியல் முக்கியத்துவமும் இரண்டாமிடத்துக்கு போனது.

இந்த நிலையில், மக்களவைத் தேர்தலில் தோற்றுப் போனதுமே கோவை மீது தனக்கிருந்த பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொண்ட அண்ணாமலை, எதிர்பார்ப்புகளையும் குறைத்துக் கொண்டார். இதனால் மீண்டும் வானதியின் கை ஓங்க ஆரம்பித்தது. இருந்த போதும் மாநில தலைவர் பொறுப்பில் இருந்ததால் அண்ணாமலை மீது கோவை மக்களுக்கு இன்னும் கொஞ்சம் பற்று மீதி இருந்தது. ஆனால், தலைவர் பதவியிலிருந்து அண்ணாமலை மாற்றப்பட்டதுடன் அதிமுகவுடன் கூட்டணியும் இறுதியானதால் மீண்டும் கோவையில் வானதியின் கொடி பறக்க ஆரம்பித்திருக்கிறது.

அதிமுக கூட்டணியால் கடந்த முறை வெற்றி பெற்ற வானதி, மீண்டும் அதிமுகவுடன் கூட்டணி அமைய வேண்டும் என்பதிலும் அதிக முனைப்புடன் இருந்தவர் என்பதும் இப்போது கோவையில் அவரது செல்வாக்கு அதிகரிக்க முக்கிய காரணம். இதையடுத்து, கோவை தொழில்துறையினர் பலரும் மத்திய அரசின் மூலம் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகளுக்காக வானதியை நாட ஆரம்பித்திருக்கிறார்கள். அண்ணாமலையின் செல்வாக்கை குறைத்து வானதி மீண்டும் அதிகாரத்துக்கு வருவதை பார்த்து அதிமுகவினரும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய கோவை பாஜக நிர்வாகிகள் சிலர், "அதிமுக கூட்டணியில் வெற்றிபெற்ற வானதி சீனிவாசன், அதை வைத்து கோவை மாவட்ட பாஜகவில் தனக்கென தனியான செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். இதில் அவரது உழைப்பும் இருக்கிறது. இடையில் அண்ணாமலை என்ட்ரியால் அவரது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை விழுந்தது உண்மை தான். இருப்பினும் மாநில தலைவரை எதிர்த்து அவரால் எதுவும் பேசமுடியாத நிலை. அதனால் அமைதி காத்தார்.

இப்போது அவருக்கு ரூட் க்ளியர் ஆகி இருக்கிறது. அதேசமயம், மாநிலங்களவைக்கு சிபாரிசு செய்யப்படாத பட்சத்தில் அண்ணாமலை சட்டமன்றத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவார். அப்படி போட்டியிட்டால் கோவை மாவட்டத்தில் தான் அவர் போட்டியிடுவார். ஆனாலும் அப்போது அவர் வானதிக்கு சக வேட்பாளராகத்தான் இருப்பாரே தவிர இன்னொரு அதிகார மையமாக வரவாய்ப்பில்லை" என்றனர்.

இந்த நிலையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்து கோவையில் பாஜக நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு முதலில் அண்ணாமலையை சிறப்புப் பேச்சாளராக போட்டு போஸ்டர் அடித்திருந்தார்கள். இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை, ஆர்ப்பாட்ட நாளில் அண்ணாமலைக்குப் பதிலாக அந்த இடத்தில் வானதி இருந்தார்.

அன்றைய தினம் கோவை விமான நிலையத்துக்கு வந்த அண்ணாமலை, "அண்ணே நான் ஈரோடு செல்கிறேன்" எனச் சொல்லிவிட்டு செய்தியாளர்களிடம் இருந்து எஸ்கேப் ஆனார். தேர்தலுக்குள் இன்னும் எத்தனை எஸ்கேப்கள் நடக்கிறதென்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

## நகைக் கடன் புதிய நிபந்தனைகளை திரும்பப் பெற ரிசர்வ் வங்கிக்கு இபிஎஸ் வலியுறுத்தல்






சென்னை: மே.24-

"ஏழை, எளிய, நடுத்தர மக்களின் அவசரத் தேவைகளுக்காக வங்கிகளில் வைக்கப்படும் நகை அடமானக் கடனுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய நிபந்தனைகளை இந்திய ரிசர்வ் வங்கி திரும்பப் பெறும்படி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மக்கள் நலன் கருதி, இந்தப் புதிய நிபந்தனைகளை இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, தனியார் நகைக் கடைகளில் வாங்கப்பட்ட தங்கக் காசுகளின் தரத்தையும் பரிசோதித்து தங்கக் கடன் வழங்கவும் வலியுறுத்துகிறேன்

இந்திய மக்கள் தொகையில் சுமார் 80 சதவீத மக்களுக்குமேல் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு அவசரத் தேவை ஏற்படின், அருகில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளில் தங்களது நகைகளை அடமானம் வைத்து, நிலைமையை சமாளிக்கும் சராசரி மக்கள் ஆவார்கள்.

இந்நிலையில், இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் நகை அடமானத்திற்கு புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது.

›› இதுவரை, நகை மதிப்பில் 80 சதவீதம் வரை கடன் அளிக்கப்பட்டு வந்தது. இனி, 75 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

›› நகை அடமானம் வைத்து கடன் வாங்குபவர்கள் இனி, இது தங்களது சொந்த நகைதான் என்பதற்கு உரிய ஆதாரங்களை வழங்க வேண்டும். அதாவது, கடன் வாங்குபவர்கள் தங்கத்தை வாங்கியதற்கான அசல் ரசீதுகள் இல்லையென்றால், ஒரு தகுந்த ஆவணம் அல்லது சுய சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

›› தங்க நகைகள், ஆபரணங்கள் மற்றும் வங்கிகளால் விற்கப்படும் குறிப்பிட்ட தங்க நாணயங்கள் (22 காரட் அல்லது அதற்கு மேற்பட்ட தூய்மையுடன் இருக்கும் நகைகளுக்கு) மட்டுமே நகைக் கடன் வழங்க தகுதியானவை ஆகும்.

›› கடன் வரம்பு, தங்க நகைகளின் மொத்த எடை 1 கிலோவிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

›› தங்கக் காசு அடமானம் வைத்தால், அது 50 கிராமுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இந்த தங்கக் காசு, வங்கிகள் விற்கும் தங்கக் காசாக இருந்தால் மட்டுமே கடன் வழங்கப்படும். தனியார் நிறுவனங்கள் தயாரித்து விற்கும் தங்கக் காசுகளுக்கு நகைக் கடன் கிடையாது.

›› தங்கக் கடனை முழுமையாக அடைத்தால்தான் புதிய கடன் வழங்கப்படும். இதுதவிர, மேலும் பல புதிய விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

›› தங்க நகைகளின் தரம், எடை, போன்றவைகள் துல்லியமாகக் கணக்கிடப்பட வேண்டும்.

மேற்கண்ட புதிய நிபந்தனைகளின்படி, தங்களின் அவசரத் தேவைகளுக்கு, சொந்த நகைகளின் பேரில் அருகில் உள்ள கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

எனவே, மக்கள் நலன் கருதி, இந்தப் புதிய நிபந்தனைகளை இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, தனியார் நகைக் கடைகளில் வாங்கப்பட்ட தங்கக் காசுகளின் தரத்தையும் பரிசோதித்து தங்கக் கடன் வழங்கவும் வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.




■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் மாமன்றக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அருகில் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தாம்பரம் மேற்கு பகுதி 63வது வட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா

தாம்பரம், மே.24-

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி 63வது வட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (R.O.PLANT) திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 5வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளருமான எஸ்.இந்திரன் தலைமையில், தாம்பரம் மேற்கு பகுதி துணை செயலாளர் கி.வேல்மணி ஏற்பாட்டில், 63வது வார்டு மாமன்ற உறுப்பினர் பி.ஜோதிகுமார் வரவேற்புரையில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து மேலும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர துணை செயலாளரும் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ், தலைமை கழக பேச்சாளர் எஸ்.ஜி.கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.



## தனியார் கல்குவாரியில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதி உதவி ஆறுதல் கூறிய அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர்



சிவகங்கை, மே.24-

சிவகங்கை மாவட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட மல்லாக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்குவாரியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பாறை மற்றும் மண் சரிவு விபத்தின் போது உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.04.00 இலட்சமும், தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.01.50 இலட்சமும் மற்றும் தனியார் கல் குவாரி நிறுவனத்தின் சார்பில் தலா ரூ.05.00 இலட்சமும் என மொத்தம் தலா ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியுதவியினை நேரில் சென்று வழங்கி,

அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட மல்லாக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்குவாரியில், கடந்த (20.05.2025) அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பாறை மற்றும் மண் சரிவு விபத்தில், பணியில் ஈடுபட்டிருந்த 05 நபர்கள் உயிரிழந்தனர். இவை தொடர்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.04.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கிட உத்தரவிட்டார்.

இவ்விபத்தில் சிக்கி உயிரிழந்த 5 நபர்களில், குழிசேவல்பட்டியை சேர்ந்த திரு.கணேஷ், ஒடப்பட்டியை சேர்ந்த திரு.முருகானந்தம், இ.மலம்பட்டியை சேர்ந்த திரு.ஆறுமுகம் மற்றும் திரு.ஆண்டிச்சாமி ஆகியோர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.04.00 இலட்சத்திற்கான காசோலையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் உடன் நேரில் சென்று இறந்தவர்களின் குடும்பத்தினரிடம் வழங்கியதுடன், தனது சொந்த நிதியிலிருந்தும் தலா ரூ.01.50 இலட்சம் நிதியுதவியினையும், தனியார் குவாரியின் சார்பில் தலா ரூ.05.00 இலட்சம் வீதம் நிதியுதவியும் என உயிரிழந்தவர்களின் குடுமபத்தினருக்கு தலா ரூ.10.50 இலட்சத்திற்கான நிவாரண நிதியுதவியினை நேரில் சென்று வழங்கி, ஆறுதல் கூறினார்.

மேலும், ஒடிசா மாநிலத்தை சேர்ந்த திரு.ஹர்ஷித் அவர்களின் குடும்பத்தினர் வருகை புரிந்தவுடன் உரிய நிவாரண நிதியுதவிகள் அக்குடும்பத்தினரிடம் வழங்கப்படும் எனவும், அதுமட்டுமன்றி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் கோரிக்கைக்கிணங்க, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு தேவையான உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.



## ஊரப்பாக்கம் அருகே காரனைப்புதுச்சேரியில் 12 ஆண்டுகளுக்கு பிறகு சங்கோதி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம். அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு

கூடுவாஞ்சேரி, மே.23-

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் அருகே உள்ள காரனைப்புதுச்சேரியில் கடந்த 12 ஆண்டுகளுக்கு பிறகு சங்கோதி அம்மனுக்கு மகா கும்பாபி ஷேகம் நடைபெற்றது. இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்றார். செங்கல்பட்டு மாவட்டம், ஊரப்பாக்கம் அடுத்த காரனைப்புதுச்சேரி ஊராட்சியில், காரனைப் புதுச்சேரி, காட்டூர், பெரியார்நகர், அண்ணா நகர், மயிலிமா நகர், கோகுலம்காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இதில், ஊராட்சிக்கு உட்பட்ட காரனைப்புதுச்சேரி கிராமத்தில் பழமை வாய்ந்த சங்கோதி அம்மன் ஆலயம் உள்ளது. இதில் சங்கோதி அம்மன் ஆலய வளாகத்தில் தெப்பக்குளத்துடன் பரிவார தெய்வங்களான விநாயகர், முருகர், சப்தகன்னிகள், ஐயப்பன், நவகிரகங்கள் அமைக்கப்பட்டு கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றன. இந்நிலையில் மீண்டும் இந்த ஆலயம் வேத சிவ ஆகம சிற்ப சாஸ்திர முறைப்படி சீர்திருத்தம் செய்யப்பட்டு கலாவர்ண லேபனங்கள் புதியதாக அமைக்கப்பட்டு புனராவர்த்தன ஜீர்னோத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா திமுக ஊராட்சி மன்ற தலைவர் நளினிஜெகன் தலைமையில் நேற்று காலை வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் 6ம் கால பூஜை, கோபூஜை, அஸ்வபூஜை, கஜ பூஜையுடன் வேதபாராயணம், திருமுறை பாராயணம், மூல மந்திர ஹோமங்கள், மலம் மந்திர ஹோமங்கள், காயத்ரி ஹோமங்கள், நாடி சந்தானம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டன. பின்னர் அங்கு திரண்டு இருந்த 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டன. மேலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன. இதில் காஞ்சி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் குறுசிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் ஆப்பூர் சந்தானம் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். அப்போது அங்குள்ள சங்கோதி அம்மன் கோயில் தெப்பக்குளத்தில் உள்ள மீன்களுக்கு அமைச்சர் பொறி தூவினார்.



## திருவாடானை அருகே சட்ட விழிப்புணர்வு முகாம்

திருவாடானை, மே.24-

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே உள்ள அச்சங்குடி ஊராட்சியில் திருவாடானை வட்ட சட்ட பணிகள் குழுவின் சார்பாக சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி மெஹபூப் அலிகான் அறிவுறுத்தலின் படியும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் சார்பு நீதிபதி சரவண பாபு ஆலோசனையின் பேரிலும் திருவாடானை வட்ட சட்டப் பணிகள் குழுவின் தலைவர் தலைவர் அன்டோனி ரிஷந்தேவ் உத்தரவின் பேரில் வட்ட சட்டப் பணிகள் குழுவின் சார்பாக சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வழக்கறிஞர் ஜெகன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் , பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து சட்டம் சார்ந்த விழிப்புணர்வு உரையாற்றி இம்முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சட்டவிழிப்புணர்வு சம்மந்தமான துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும் இந்நிகழ்ச்சியில் பெண்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை சட்டதன்னார்வலர் கோட்டைச்சாமி செய்திருந்தனர்.




## தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் பாரதிய ஜனதா கட்சி சார்பில் நடைபெற்ற ஆப்ரேஷன் சிந்தூர் வெற்றி கொண்டாட்ட விழா ஊர்வலம்

தேனி, மே.24-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் பாரதிய ஜனதா கட்சி சார்பில் நடைபெற்ற ஆப்ரேஷன் சிந்தூர் வெற்றி கொண்டாட்ட விழா ஊர்வலம் வள்ளுவர் சிலையில் இருந்து ஆரம்பித்து நகர்வலம் ஆக முக்கிய வீதிகளில் தேவர் சிலை மற்றும் வ.உ.சி சிலையில் வரை வெற்றி கொண்டாட்டத்தை நடைப்பயணமாக முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட பெண்கள் தேசியக்கொடி ஏந்தி ஊர்வலமாக வந்தனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட பாரதிய ஜனதா கட்சியினர் மற்றும் ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சரவணன் தலைமையில் குளிர்பானம் வழங்கினர். இந்த ஊர்வலமானது மாவட்ட தலைவர் ராஜபாண்டியன் மற்றும் முன்னாள் மாவட்ட தலைவர் பி.சி. பாண்டியன் ஆகியோர்களின் முன்னிலையிலும், நகர் தலைவர் சித்ராதேவி தண்டபாணி தலைமையிலும் மற்றும் போடி நகர நிர்வாகிகள் மணி, தெய்வம், சிவகுருநாதன், செல்வம், பாலமுருகன், புவனேஷ், தெய்வேந்திரன், முருகதாஸ்,ரவி, பாலாஜி, மதன், ராஜேந்திரன், முகுந்தன், லதா ,மற்றும் பாரதிய ஜனதா கட்சி மேற்கு ஒன்றிய நிர்வாகிகள், அணி பிரிவு, சக்தி கேந்திர பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சி சுற்று வட்டாரத்தில் மீண்டும் தக்காளி சாகுபடி

பொள்ளாச்சி, மே.24-

பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதியில் தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பொள்ளாச்சி சுற்றுவட்டாரத்தில் பல்வேறு கிராமங்களில் தக்காளி சாகுபடி அதிகளவு உள்ளது. ஆண்டுக்கு மூன்று முறை சாகுபடி செய்வதால், சுற்றுவட்டாரத்தில் அடிக்கடி தக்காளி அறுவடை பணி நடைபெறுகிறது. அந்நேரத்தில் மார்க்கெட்டுகளில் தக்காளி வரத்து அதிகரித்து விலை சரிகிறது. கடந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழையையொட்டி சாகுபடி செய்யப்பட்ட தக்காளி செடிகள், மார்ச் மாதம் துவக்கத்தில் நன்கு வளர்ச்சியடைந்தது.

இதையடுத்து பல இடங்களில் தக்காளி அறுவடை பணி தீவிரமாக நடைபெற்றது. சுற்றுவட்டார கிராமங்களில் அறுவடை தீவிரத்தால் அந்நேரத்தில் மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகமானது. மேலும் திண்டுக்கல், திருப்பூர் உள்ளிட்ட வெளியூர்களிலிருந்தும் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

மார்க்கெட்டுக்கு தொடர்ந்து தக்காளி வரத்து அதிகத்தால், அதன் விற்பனை குறைந்து விலை கடுமையாக சரிந்தது. சுமார் 2 மாதத்திற்கு முன்பே பல நாட்களாக, 14 கிலோ எடைகொண்ட ஒரு பெட்டி தக்காளி 100 முதல் அதிகபட்சமாக ரூ.130க்கே ஏலம் போனது. சராசரியாக ஒரு கிலோ ரூ.8 முதல் ரூ.10க்கே விற்பனையானது.

தற்போது வெளியூர்களிலிருந்து பொள் ளாச்சி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து தொடர்ந்து அதிகரிப்பால், அதன்விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. இந்நிலையில், தற்போது வெயிலின் குறைவாக இருப்பதுடன், மழையும் போதியளவு இல்லை எனலாம். இருப்பினும், சுற்றுவட்டார கிராமங்களில் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்ட தக்காளி செடியுடன் விளை நிலத்தை உழுது, மீண்டும் புதிதாக தக்காளி சாகுபடியில் விவசாயிகள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

போதிய மழையில்லாமல் இருந்தாலும், பல இடங்களில் சொட்டுநீர் பாசனத்தில் தக்காளி சாகுபடி செய்கின்றனர். சுற்றுவட்டாரத்தில் தக்காளி அறுவடை நிறைவடைந்த நிலையில், புதிதாக தக்காளி சாகுபடி துவக்கத்தால், அடுத்து பெய்யும் பருவமழைக்கு விரைவில் விளைச்சலடையும் என விவசாயிகள் தெரிவித்தனர்.




## குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65வது பழக்கண்காட்சி நாளை துவக்கம், பூத்து குலுங்கும் மலர்கள் சுற்றுலா பயணிகள் ஆர்வம்

குன்னூர், மே.22-

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்கா உருவாகி 151 ஆவது ஆண்டு மற்றும் 65 வது பழக்கண்காட்சி வரும் நாளை துவங்கி 26ம் தேதி வரை மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளதால் பூங்காவை தயார் செய்யும் பணியில் தோட்டக்கலைத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை சீசனை முன்னிட்டு வரக்கூடிய சுற்றுலா பயணிகளை உற்சாகப்படுத்த தோட்டக்கலை துறை சார்பில் கோடை விழாக்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65 வது பழக்கண்காட்சி நாளை துவங்கி 25ம் தேதி வரை மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளது. அதற்கான ஏற்பாடுகளில் பூங்கா நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டு சிம்ஸ் பூங்கா துவங்கி 151 வது ஆண்டு என்பதால் வரக்கூடிய சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக பூங்கா நுழைவாயில் முன்பு 30 வகையான பழங்களை கொண்டு அலங்கார நுழைவாயில் அமைக்கப்பட உள்ளது. இந்த ஆண்டு சுற்றுலா துறையை மேம்படுத்தும் வகையில், சுற்றுலா தலங்களில் உள்ள காட்சிகளை பழங்கள் மூலம் தத்ரூபமாக வடிவமைத்து காட்சிப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பூங்கா நுழைவாயில் உள்ளே சுமார் ஐந்து டன் எடையில் ஆன பழங்களை கொண்டு சுற்றுலா பகுதியில் உள்ள ரம்மியமான காட்சிகளை நினைவூட்டும் வகையில் காட்சிப்படுத்தப்பட உள்ளது. மேலும் தமிழகத்தில் உள்ள தோட்டக்கலை துறைக்கு சொந்தமான தோட்டக்கலை பண்ணைகளில் விளைவிக்கப்படும் அனைத்து வகையான பழங்களும் சிறப்பு அரங்குகள் மூலம் கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படுகிறது.மூன்று நாள் நடைபெற உள்ள பழக்கண்காட்சி நாளை துவங்க உள்ள நிலையில் அதற்கான ஆயத்தப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதில் ஏற்கனவே நடவு செய்யப்பட்ட மூன்று லட்சம் மலர் செடிகள் அனைத்தும் தற்போது பூத்துக் குலுங்கி சுற்றுலா பயணிகள் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. தொடர்ச்சியாக நடைபெற உள்ள பழ கண்காட்சியில் சுற்றுலா பயணிகள் நாவில் உமிழ் நீர் சுரக்கும் வகையில் 300க்கும் மேற்பட்ட வகை யிலான பழ வகைகள் இடம்பெற உள்ளதால், கூடுதலாக சுற்றுலா பயணிகள் வரத்து அதிகரிக்கும் என தோட்டக்கலைத் துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.






# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65 வது பழ கண்காட்சி காட்சி அரசு தலைமை கொறடா திறந்து வைத்தார்

குன்னூர், மே.24-

கோடை சீசனை முன்னிட்டு தோட்டக்கலைத் துறை சார்பில் மாவட்ட முழுவதும் பல்வேறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.இதில் ஒரு பகுதியாக இன்று குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65வது பழக்கண்காட்சி துவக்க விழா நடைபெற்றது. இதில் தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் சிபிலா மேரி வரவேற்று பேசினார்.மாவட்ட ஆட்சியர் லட்சுமிபவ்யா தண்ணீரு தலைமை வகித்தார். அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் பழ கண்காட்சியை திறந்து வைத்தார்.நிகழ்ச்சியில்திமுக மாவட்ட பொறுப்பாளர் கே எம் ராஜு, குன்னூர் சப் கலெக்டர் சங்கீதா,மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் என் எஸ் நிஷா, குன்னூர் நகராட்சி ஆணையர் இளம்பருதி நகர மன்ற தலைவர் சுசீலா, துணைத்தலைவர் வாசிம் ராஜா, திமுக மாவட்ட அவைத் தலைவர் போஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் காளிதாசன், செல்வம், வீரபத்திரன்,நகர செயலாளர் ராமசாமி ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கோம்பை பகுதியில் குறைந்து வரும் பூக்கள் சாகுபடி

தேவாரம், மே.24-

கோம்பை பகுதியில் பூக்கள் சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வம் குறைந்துள்ளதால், மானியம் வழங்கி விவசாயிகளை ஊக்குவிக்க வேளாண்துறையினர் முன் வர வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.



உத்தமபாளையம் வட்டாரத்தில் பல்லவராயன்பட்டி, டி.சிந்தலைசேரி, கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம், பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் பரப்பில் பூக்கள் விவசாயம் நடந்து வந்தன. அதன் பின்னர், சுமார் 100 ஏக்கருக்கும் அதிகமாக கோம்பை, பல்லவராயன்பட்டி பகுதியில் நடந்தது.

இடைக்காலங்களில் குறிப்பாக கடந்த 15 வருடம் முன்பு மழை இல்லாத நிலையில் பூக்கள் விவசாயம் சுருங்கியது. இதற்கு முதல் காரணமாக மழையின்றி அனைத்து கண்மாய்கள், குளங்கள் வறண்டது தான்.

பூக்கள் விவசாயத்தை பொருத்தவரை மழை இல்லாவிட்டாலும், ஆரம்ப கால பராமரிப்பு என்பது மிக முக்கியம். வடகிழக்கு பருவமழை, கோடைமழை, தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்யும் போது, அனைத்து விவசாயங்களும் வளம் பெறும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஆனால், பருவமழையை நம்பி பெரும்பாலும் விவசாயிகள் ஏமாற்றத்துடனே உள்ளனர். இந்நிலையில், பருவமழை தொடர்ந்து பெய்யும்போது மல்லிகை, பிச்சிப் பூ, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்கள் சாகுபடி அதிகமான ஏக்கர் நிலங்களில் செய்வதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. எனவே இந்த முறை சாகுபடி பரப்பளவை அதிகரிக்க வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. குறிப்பாக பூக்கள் விவசாயத்திற்கு தேவையான மானியங்களை வழங்க வேண்டும். மற்ற சாகுபடிக்கு வழங்குவது போல் உரங்கள், இடுபொருட்கள், நாற்றுகள் வாங்குவதற்கு மானியங் களை அறிவிக்க வேண்டும். தொடர்ந்து, பூக்களை சாகுபடியில் அதிக மகசூலுக்கான உத்திகளையும், புதிய தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வுகளையும் விவசாயிகளிடத்தே ஏற்படுத்த வேண்டும்.

தொடர்ந்து செடிகளின் வளர்ச்சிகளை கண்காணித்து பூச்சி தாக்குதல், நோய் தாக்குதல் உள்ளிட்டவற்றில் இருந்து பயிர்களை பாதுகாக்க தகுந்த ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். இதன் மூலம் மீண்டும் பூக்களின் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு உருவாகும் என கூறப்படுகிறது.

# ஒவ்வொரு மாணவர்களின் புத்திகூர்மையை ஊக்குவிக்க கிராண்ட் மாஸ்டர்கள் பிரக்ஞானந்தா, வைஷாலி உடன் இணைந்து 'கிளாஸ்மேட்' நடத்தும் 'எடுகேம்ஸ் இன்பினிட்டி' புதிர் போட்டி

கோயம்புத்தூர், மே.24-

இந்தியாவின் முன்னணி நோட்புக் மற்றும் எழுதுபொருள் தயாரிப்பு பிராண்ட்களில் ஒன்றான ஐடிசி நிறுவனத்தின் கிளாஸ்மேட், மாணவர்களின் புத்திகூர்மையை ஊக்குவிக்கும் வகையில் 'எடுகேம்ஸ் இன்பினிட்டி'என்னும் புதிர் போட்டியை கிராண்ட் மாஸ்டர்கள் பிரக்ஞானந்தா, வைஷாலி உடன் இணைந்து நடத்த உள்ளது. கல்வியை ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த புதிர் போட்டியை கிளாஸ்மேட் அறிவித்துள்ளது. இதில் பங்கேற்று வெற்றி பெறுபவர்கள் ஹாங்காங் டிஸ்னிலேண்டை சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள்.



இந்த போட்டியின் முக்கிய நோக்கம், கற்றல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், மேலும் மாணவர்கள் தங்கள் கல்வியை வேடிக்கையான முறையில் கற்க வேண்டும் என்பதாகும். அந்த வகையில், தலைமுறை தலைமுறை யாக மாணவர்களால் மிகவும் விரும்பப்படும் கிளாஸ்மேட் நோட்புக்கின் கடைசிப் பக்கத்தில் 'எடுகேம்ஸ் இன்பினிட்டி'புதிர் போட்டி இடம்பெறும். மாணவர்கள் நோட்புக்கின் கடைசிப் பக்கத்தை ஸ்கேன் செய்து ஒவ்வொரு நாளும் ஒரு புதிய விளையாட்டை விளையாடலாம்.

இந்த போட்டி குறித்து மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வரும் 24ந்தேதி இந்தியா முழுவதும் உள்ள 30 நகரங்களில் கிளாஸ்மேட் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளது. இதன் மூலம் ஒரு கிளாஸ்மேட் நோட்புக்கை வாங்கி இந்த புதிர் போட்டியில் மாணவர்களை பங்கேற்க அழைப்பு விடுக்க உள்ளது.

இந்த சீசனில், உலக சாம்பியன்களுடன் சேர்ந்து விளையாட ஒரு சிறப்பான வாய்ப்பு கிடைத்துள்ளதால், இந்த பிரச்சாரம் இன்னும் உற்சாகமாகிறது. இந்திய செஸ் கிராண்ட் மாஸ்டர்களுமான இரட்டையர்கள் பிரக்ஞானந்தா மற்றும் வைஷாலி ஆகியோர் 30 நாட்களும் இந்த புதிர் போட்டியில் பங்கேற்க இருக்கிறார்கள். புதிர் போட்டியில் ஈடுபடுத்துவது கவனம் செலுத்துவது என்பது மனதளவில் சுறுசுறுப்பாக இருப்பதற்கான ஒரு சிறந்த வழி என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இது குறித்து பிரக்ஞானந்தா கூறுகையில், 'எடுகேம்ஸ் இன்பினிட்டி'என்பது வெறும் விளையாட்டை மட்டும் பற்றியது அல்ல இது உங்கள் மனதைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு வேடிக்கையான மற்றும் பயனுள்ள வழியாகும். ஒவ்வொரு நாளும் ஒரு புதிய புதிருக்கு நாடு முழுவதும் 30 நகரங்களில் உள்ள மாணவர்கள் எவ்வாறு விடை காண்கிறார்கள் என்பதைப் பார்ப்பதில் நான் உற்சாகமாக இருக்கிறேன் என்று தெரிவித்தார்.

வைஷாலி கூறுகையில், நாங்கள் எங்கள் வீட்டில் பல்வேறு புதிர் போட்டிகளை விளையாடி உள்ளோம். அவை எங்களை மிகவும் புத்திகூர்மையாக்கி உள்ளன. இன்றைய தலைமுறையினருக்கு கற்றலை மகிழ்ச்சியானதாக மாற்றும் நடவடிக்கையில் இறங்கி உள்ள கிளாஸ் மேட்டை பார்க்கையில் எனக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த முயற்சி குறித்து தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திய அவர்களின் பெற்றோர் கூறுகையில், எங்கள் குழந்தைகள் இளமையாக இருந்தபோது, அவர்களை தினமும் புதிர்கள் மற்றும் மூளைக்கு பயிற்சி தரும் விளையாட்டுகளை விளையாட ஊக்குவித்தோம். இந்த சிறிய பழக்கம் அவர்களின் மன ஒழுக்கத்தை எவ்வாறு வளர்க்க உதவியது என்பதை நாங்கள் நேரில் கண்டுள்ளோம். கிளாஸ்மேட் துவக்கியுள்ள இந்த முயற்சி எங்களுக்கு அதை நினைவூட்டுகிறது.

இது குறித்து ஐடிசி நிறுவனத்தின் கல்வி மற்றும் எழுதுபொருள் தயாரிப்புகள் வணிகப் பிரிவின் தலைமை நிர்வாகி விகாஸ் குப்தா கூறுகையில், கற்றல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும், படைப்பாற்றல், ஆர்வம் மற்றும் வேடிக்கையான முயற்சி ஆகியவற்றின் உணர்வு அந்த நம்பிக்கையை உயிர்ப்பிக்க வேண்டும் என்றும் அதற்கு சரியான முன் மாதிரியாக பிரக்ஞானந்தாவும் வைஷாலியும் உள்ளனர். அவர்களின் வெற்றியும் சாதனைகளும் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த முயற்சி இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

இந்த போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு தினமும் விர்ச்சுவல் ரியாலிட்டி ஹெட்செட் பரிசாக வழங்கப்படுவதோடு, முதலிடம் பிடிப்பவர்கள் டிஸ்னிலேண்டிற்கும் அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள்.

இந்தப் போட்டியானது அசாமில் குவஹாத்தி, கர்னாடகாவில் பெங்களூர், ஹூப்ளி, மங்களூர், மைசூர், தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சென்னை, வேலூர் மற்றும் புதுச்சேரி உள்பட கேரளா, ஆந்திரா, குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் முக்கிய நகரங்கள் என 30 நகரங்களில் நடைபெற உள்ளது.

# மதுரை ரயில் நிலையத்தில் முதல் முறையாக பல அடுக்கு நான்கு சக்கர வாகன காப்பகம்

மதுரை, மே.24

மதுரை ரயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மேற்கு நுழைவாயிலின் தெற்கு பகுதியில் ரூபாய் 6.92 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு அடுக்கு கார் நிறுத்துமிடம் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. மதுரை கோட்டத்தில் முதன் முதலாக பயன்பாட்டிற்கு வரும் பல அடுக்கு நான்கு சக்கர வாகனம் காப்பகம் 2,413 சதுர மீட்டரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 60 கார்கள் நிறுத்தலாம். இந்த புதிய காப்பகத்தில் சிசிடிவி கண்காணிப்பு, மின் தூக்கி, கழிப்பறைகள், மின்சார வாகன மின்கலத்திற்கு சக்தி ஊட்டும் வசதி, மின்னணு வாயிலாக



கட்டணம் செலுத்தும் வசதி, தீயணைப்பு கருவிகள் போன்ற நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த காப்பகத்தில் கார்கள் நிறுத்த இரண்டு மணி நேரத்திற்கு ரூபாய் 30, ஆறு மணி நேரத்திற்கு ரூபாய் 50, பனிரெண்டு மணி நேரத்திற்கு ரூபாய் 60, 24 மணி நேரத்திற்கு ரூபாய் 100 கட்டணமாக வசூலிக்கப்பட இருக்கிறது. இந்த வாகன காப்பகத்தை மேலாண்மை செய்ய மின்னணு ஒப்பந்த புள்ளி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடைமுறைகள் நிறைவடைந்து காப்பகம் விரைவில் பயணிகள் பயன்பாட்டுக்கு விடப்படும்.

மேலும் இதே போல ஒரு மூன்றடுக்கு நான்கு சக்கர வாகன காப்பகம் கிழக்கு நுழைவாயிலின் வடக்கு பகுதியில் கட்டப்பட்டு வருகிறது. இந்த காப்பகம் 9173.45 சதுர மீட்டர் கொண்டது. இதில் 166 கார்கள் நிறுத்தும் வசதி உள்ளது. இதில் கார்கள் உள்ளே சென்று வெளியே வர மூன்று நுழைவாயில்கள் உள்ளன. இதிலும் சிசிடிவி கண்காணிப்பு, மின் தூக்கி, கழிப்பறைகள், மின்சார வாகன மின்கலத்திற்கு சக்தி ஊட்டும் வசதி, மின்னணு வாயிலாக கட்டணம் செலுத்தும் வசதி, தீயணைப்பு கருவிகள் போன்ற நவீன வசதிகள் உள்ளன. ஏற்கனவே மறுசீரமைப்பு பணிகளில் புதிதாக கட்டப்பட்ட பல அடுக்கு இருசக்கர வாகன காப்பகம் கிழக்கு நுழைவாயிலின் தெற்கு பகுதியில் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 2.26 கோடி ரேஷன் கார்டுகள் பதிவு; 6.98 கோடி பேரின் ஆதார் தரவு விவரங்கள் சேகரிப்பு: விரல் ரேகை பதிவு கட்டாயம்

கோவை, மே.24-

தமிழகத்தில் 39 மாவட்டங்களில் 318 வட்டங்களில், 34,800 ரேஷன் கடைகள் செயல்பட்டு வருகிறது. 2 கோடியே 26 லட்சத்து 14 ஆயிரத்து 389 ரேஷன் கார்டுகள் பயன்பாட்டில் இருக்கிறது. இதில் பயனாளிகளாக 7 கோடியே 2 லட்சத்து 38 ஆயிரத்து 827 பேர் உள்ளனர். இதில் 6 கோடியே 98 லட்சத்து 25 ஆயிரத்து 448 பேர் ஆதார் விவரங்களை பதிவு செய்துள்ளனர். 2 கோடியே 26 லட்சத்து 13 ஆயிரத்து 33 பேர் செல்போன் எண் விவரங்களை பதிவு செய்துள்ளனர். மாநில அளவில் உள்ள ரேஷன் கடைகளுக்கு ஒன்றிய அரசு பல்வேறு ஒதுக்கீட்டில் உணவு பொருட்களை சப்ளை செய்து வருகிறது. பயனாளிகள் யார் யார் என்ற விவரங்களை ஆதார் அடிப்படையில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். பயனாளிகள் விவரங்களை ஒன்றிய அரசின் உணவு துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் உள்ள ரேஷன் கடைகளில் சில லட்சம் பேர் தங்களது விரல் ரேகையை பதிவு செய்யாமல் இருப்பதாக தெரிகிறது. பெரியவர்கள் மட்டுமின்றி சிறார்களும் தங்களது விரல் ரேகையை ஆதார் தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த பதிவுகளின் அடிப்படையில் தான் வரும் காலங்களில் உணவு பொருட்கள் ஒதுக்கீடு இருக்கும் என தகவல் வெளியா கியுள்ளது. கடந்த காலங்களில் குறிப்பாக கொரோனா நோய் பரவல் காலங்களில் வழங்கப்பட்ட அரிசி அளவு கடந்த ஆண்டில் பாதியாக குறைக்கப்பட்டது. ஏற்கனவே ஒன்றிய அரசு கோதுமை, கெரசின் போன்றவற்றை வழங்குவதை அரிதாக்கி விட்டது. இதர உணவு




பொருட்களுக்கும் பயனாளிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படுவதில்லை. இந்த நிலையில் மேலும் உணவு தானிய சப்ளையை நிறுத்தும் நோக்கத்தில் விரல் ரேகை பதிவை கட்டாயமாக்கி நெருக்கடி தருவதாக வாணிப கழகத்தினர், வழங்கல் பிரிவினர் குற்றம்சாட்டுகின்றனர்.

மாநில அளவில் விரல் ரேகையை பெற ரேஷன் கடை விற்பனையாளர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வழங்கல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில்,''அரிசி, பருப்பு, பாமாயில், கோதுமை, சர்க்கரை போன்றவை இனி நபர் கணக்கில் முறையாக வழங்கப்படும். ரேஷன் பொருட்கள் விற்பனை ஆன்லைன் மயமாக்கப் பட்டது. இறந்தவர்களின் பெயர்கள் கார்டில் இருந்து நீக்கப்பட்டு வருகிறது. சிலர் ஆதார் கார்டு விரல் ரேகை, கடைகளில் உள்ள பயோ மெட்ரிக் கருவியுடன் மேட்ச் ஆகவில்லை எனக்கூறுகிறார்கள். சிறார்களின் விரல் ரேகைகளில் மாற்றம் இருக்கிறது. இவர்கள் ஆதார் கார்டில் அப்டேட் செய்தால் தான் விரல் ரேகை பெற முடியும். இந்த சிக்கல்களை தீர்க்க வேண்டியுள்ளது. அப்போது தான் 100 சதவீதம் அளவிற்கு விரல் ரேகை பதிவு பெற முடியும். ஒரு கார்டில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு பேரும் விரல் ரேகையை பதிவு செய்வது கட்டாயம்.

வெளியூர் வெளிநாடு சென்றாலும் இதில் விதி விலக்கு தர முடியாது'' என்றனர். யன்பாட்டில் இருக்கிறது. இதில் பயனாளிகளாக 7 கோடியே 2 லட்சத்து 38 ஆயிரத்து 827 பேர் உள்ளனர். இதில் 6 கோடியே 98 லட்சத்து 25 ஆயிரத்து 448 பேர் ஆதார் விவரங்களை பதிவு செய்துள்ளனர். 2 கோடியே 26 லட்சத்து 13 ஆயிரத்து 33 பேர் செல்போன் எண் விவரங்களை பதிவு செய்துள்ளனர். மாநில அளவில் உள்ள ரேஷன் கடைகளுக்கு ஒன்றிய அரசு பல்வேறு ஒதுக்கீட்டில் உணவு பொருட்களை சப்ளை செய்து வருகிறது. பயனாளிகள் யார் யார் என்ற விவரங்களை ஆதார் அடிப்படையில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். பயனாளிகள் விவரங்களை ஒன்றிய அரசின் உணவு துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. தமிழகத்தில் உள்ள ரேஷன் கடைகளில் சில லட்சம் பேர் தங்களது விரல் ரேகையை பதிவு செய்யாமல் இருப்பதாக தெரிகிறது. பெரியவர்கள் மட்டுமின்றி சிறார்களும் தங்களது விரல் ரேகையை ஆதார் தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த பதிவுகளின் அடிப்படையில் தான் வரும் காலங்களில் உணவு பொருட்கள் ஒதுக்கீடு இருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது. கடந்த காலங்களில் குறிப்பாக கொரோனா நோய் பரவல் காலங்களில் வழங்கப்பட்ட அரிசி அளவு கடந்த ஆண்டில் பாதியாக குறைக்கப்பட்டது. ஏற்கனவே ஒன்றிய அரசு கோதுமை, கெரசின் போன்றவற்றை வழங்குவதை அரிதாக்கி விட்டது. இதர உணவு பொருட்களுக்கும் பயனாளிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படுவதில்லை. இந்த நிலையில் மேலும் உணவு தானிய சப்ளையை நிறுத்தும் நோக்கத்தில் விரல் ரேகை பதிவை கட்டாயமாக்கி நெருக்கடி தருவதாக வாணிப கழகத்தினர், வழங்கல் பிரிவினர் குற்றம்சாட்டுகின்றனர். மாநில அளவில் விரல் ரேகையை பெற ரேஷன் கடை விற்பனையாளர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வழங்கல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில்,''அரிசி, பருப்பு, பாமாயில், கோதுமை, சர்க்கரை போன்றவை இனி நபர் கணக்கில் முறையாக வழங்கப்படும். ரேஷன் பொருட்கள் விற்பனை ஆன்லைன் மயமாக்கப் பட்டது. இறந்த வர்களின் பெயர்கள் கார்டில் இருந்து நீக்கப்பட்டு வருகிறது. சிலர் ஆதார் கார்டு விரல் ரேகை, கடைகளில் உள்ள பயோ மெட்ரிக் கருவியுடன் மேட்ச் ஆகவில்லை எனக்கூறுகிறார்கள். சிறார்களின் விரல் ரேகைகளில் மாற்றம் இருக்கிறது. இவர்கள் ஆதார் கார்டில் அப்டேட் செய்தால் தான் விரல் ரேகை பெற முடியும். இந்த சிக்கல்களை தீர்க்க வேண்டியுள்ளது. அப்போது தான் 100 சதவீதம் அளவிற்கு விரல் ரேகை பதிவு பெற முடியும். ஒரு கார்டில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு பேரும் விரல் ரேகையை பதிவு செய்வது கட்டாயம். வெளியூர் வெளிநாடு சென்றாலும் இதில் விதி விலக்கு தர முடியாது'' என்றனர்.




# வேலூரில், கால்நடை மருத்துவமனையில் வெறிநாய் தடுப்பூசி முகாம்

வேலூர், மே.24-

வேலூர் மாவட்டம், தொரப்பாடி, கால்நடை மருத்துவமனையில் வெறிநாய்களுக்கு தடுப்பூசி முகாம், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வேலூர் மாநகராட்சி இணைந்து நடத்தும் நகரில் சுற்றித் திரியும் சமுதாய நாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தொடங்கி வைத்து, மருத்துவமனையை பார்வையிட்டார். இம்முகாமில் மக்கள் பிரதிநிதிகள் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. திருக்குமரன், உதவி இயக்குநர் மரு. அந்துவன், மருத்துவர் மரு.பா ண்டியன், மருத்துவ குழு உறுப்பினர்கள் தினேஷ் பாபு, தினேஷ்குமார், ரஞ்சித்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# விபத்துக்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு

வேலூர், மே.24-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா கணியம்பாடி, வேலூர் ஆரணி சாலை NH38ல் அடிக்கடி விபத்துகள் நடைபெறும் இடமான (Black Spot Areas) கணியம்பாடி கன்னிக்கோயில் கணவாய்மேடு பகுதியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், தேசிய நெடுஞ்சாலை உதவி கோட்டப்பொறியாளர் குமாரசாமி, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார். வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# பத்தாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் 30 ஆண்டுகளாக புளியங்குடி ஏ வி எஸ் பள்ளி 100 சதவீத தேர்ச்சி

புளியங்குடி, மே.24-

தென்காசி கல்வி மாவட்டம் புளியங்குடி ஏவிஎஸ் உயர்நிலைப் பள்ளியில் கடந்த 30 ஆண்டுகளாக 100 சதவீத தேர்ச்சி பெற்று பொதுமக்கள் பார்வையில் மிகச்சிறந்த பள்ளியாக செயல்பட்டு வருகிறது நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் புளியங்குடி ஏவிஎஸ் உயர்நிலைப் பள்ளியில் 138 மாணவர்கள் தேர்வெழுதி 138 மாணவர்களும் தேர்ச்சி பெற்று 100% வெற்றி பெற்றுள்ளனர் வெற்றி பெற்றுள்ளனர் பள்ளியில் பயின்று வரும் ராஜலக்ஷ்யா 489 / 500 பெற்று முதல் மாணவியாகவும் ஹரிணி 485 / 500 மதிப்பெண் பெற்று 2ம் மாணவியாகவும் ஹரிகேசவன் மற்றும் சுபா ஐஸ்வர்யா தஸ்லிமா பானு ஆகிய மூவரும் 484/500 மதிப்பெண் பெற்று உள்ளனர் 138 மாணவ மாணவிகளில் 480 க்கு மேல் எட்டு பேரும் 450 க்கு மேல் 30 பேரும் நான் ஊருக்கு மேல்



58 பேரும் மதிப்பெண் பெற்றுள்ளனர் தமிழில் முதல் மதிப்பெண்99/100 நான்கு பேரும் ஆங்கிலத்தில் 99/100 முதல் மதிப்பெண் 2 பேரும் கணிதம் முதல் மதிப்பெண் 97/100 ஒரு மாணவனும் அறிவியலில் முதல் மதிப்பெண் 100க்கு 100 மூன்று பேரும் சமூக அறிவியலில் முதல் மதிப்பெண் 100க்கு 100 மூன்று பேரும் வெற்றி பெற்றுள்ளனர் வெற்றி பெற்ற அனைத்தும் பள்ளி மாணவ மாணவிகளை பள்ளி நிர்வாகிகள் விமலா ஹெற்சி மரகதம் சொர்ணமணி செல்வராஜ் தலைமையாசிரியர் அருள் சாமுவேல் உதவி தலைமை ஆசிரியர் ஸ்டீபன் தங்கராஜ் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர்கள் வாழ்த்து கூறி பள்ளி நிர்வாகிகளுக்கும் நன்றி கூறினர்



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பட்டத்தரசி கிராமத்தில் உள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மன்னரின் 1350 வது சத்ய விழாவில் மன்னரின் சிலைக்கு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி நேற்று (மே23) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். என் நிகழ்வில் நகராட்சி 2வது வார்டு கவுன்சிலர் இந்துமதி திருமுருகன் உடனிருந்தார்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 11 பயனாளிகளுக்கு ரூ.07.45 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் வழங்கினார்

சிவகங்கை, மே.24-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல் படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு, நடைபெற்று வரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்க ப்படுகிறது.



குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும் கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும்,

விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், கண்மாய்க்கு செல்லும் வரத்துக் கால்வாய்களை சீரமைத்திடவும், ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், தார் சாலை வசதி அமைத்திடவும், தேவை யான சான்றிதழ்களை வழங்கிடவும், விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித்,தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் இடைக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 10 விவசாயிகளுக்கு ரூ.7,45,000/ மதிப்பீட்டிலான பயிர் கடனுதவிகள் மற்றும் கிருங்காக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் எழுத்தராக பணிபுரிந்த நபர் பணியிடையே மரணமடைந்ததையொட்டி, இறந்த நபரின் வாரிசுதாரரான அந்நபரின் மகளுக்கு சிற்றெழுத்தராக கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை ஆகியவைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) சுந்தரமகாலிங்கம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன் குமார் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பழனி நகராட்சி அண்ணாமலை மருத்துவமனையில் ரத்ததான முகாம் மற்றும் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு முகாம்

பழனி, மே.24-

பழனி நகராட்சி அண்ணாமலை மருத்துவமனையில் பழனி நகராட்சி, நகராட்சி சுகாதார மையம், சேம்பர் ஆப் காமர்ஸ் இணைந்து இரத்ததான முகாம் மற்றும் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு முகாம் நடத்தியது. நகராட்சி நகர் நல அலுவலர் மனோஜ் குமார் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள், அரிமா சங்க உறுப்பினர்கள்

, நகராட்சி அலுவலர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ரத்ததானம் கொடுப்பதன் அவசியம், இறந்தபின் உடல்களை தானம் வழங்குவதன் பயன் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கினர். இரத்ததானம் வாங்கியவர்களுக்கு முட்டை, பழங்கள், குளிர்பானங்கள் வழங்கப்பட்டது. ரத்த தானம் கொடுத்ததற்கான பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. பலரும் கலந்து கொண்டு தங்கள் ரத்த வகையை அறிந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சி அண்ணாமலை மருத்துவமனையில் நடைபெற்ற, ரத்ததான முகாம் மற்றும் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு முகாமில், நகராட்சி நகர் நல அலுவலர் மனோஜ் குமார், அரிமா சுப்புராஜ், அரிமா மயில்சாமி வள்ளுவர் தியேட்டர் செந்தில்குமார், மற்றும் சேம்பர் ஆப் காமர்ஸ். சேகர். உட்பட பலர் கலந்து கொண்டனர்



சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட மல்லாக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்குவாரியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பாறை சரிவு விபத்தின் போது, உயிரிழந்த

# ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியுதவியினையும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நபரின் குடும்பத்தினருக்கு ரூ.07.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியுதவியினையும் நேரில் சென்று வழங்கி, அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்

.சிவகங்கை, மே.24-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட மல்லாக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்குவாரியில், எதிர்பாராத விதமாக 20.05.2025 அன்று ஏற்பட்ட பாறை சரிவு விபத்தில் உயிரிழந்த 6 நபர்களில், கல் இடுக்குகளில் சிக்கிய ஒடிசா மாநிலத்தை சேர்ந்த திரு.ஹர்ஷித் என்பவரின் உடல் தேசிய மீட்பு படை குழுவினரால், கடந்த (21.05.2025) காலை மீட்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், முன்னிலையில், சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை நிறைவுற்றது.

மேலும், மேற்கண்ட நபரின் குடும்பத்தினரும் வருகை தந்ததையொட்டி, அக்குடும்பத்தாரிடம் தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண நிதியான ரூ.04.00 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதிக்கான காசோலையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் சிவகங்கை அரசு மருத்து வமனை மருத்துவக்கல்லூரிக்கு நேரில் சென்று வழங்கியதுடன், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் நிதியுதவியும், தனியார் கல்குவாரி நிறுவனம் சார்பில் ரூ.5.00 இலட்சம் நிதியுதவியும் என மொத்தம் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியுதவியினை அக்குடும்பத்தாரிடம் வழங்கி, ஆறுதல் கூறினார். அதனைத்தொடர்ந்து, தனியார் ஆம்புலன்ஸ் வாகனத்தினை ஏற்பாடு செய்தும் ஒடிசா மாநிலத்திற்கு அன்னாரின் உடலை அனுப்பி வைத்தார்.

இதேபோன்று, மேற்கண்ட கல் குவாரி விபத்தில் காயமடைந்து மதுரை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த மைக்கேல் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் காலை உயிரிழந்ததையடுத்து, மதுரை ராஜாஜி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்நபரின் குடும்பத்தாருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் முன்னதாக அறிவிக்கப்பட்ட ரூ.1.00 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு நேரில் சென்று வழங்கியதுடன், தனது சொந்த நிதியிலிருந்து ரூ. 1.50 இலட்சம் நிதியுதவியும், தனியார் கல்குவாரி நிறுவனம் சார்பில் ரூ.5.00 இலட்சம் நிதியுதவியும் என மொத்தம் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியினை வழங்கி, ஆறுதல் தெரிவித்ததுடன் இறப்பு நிவாரண நிதிக்கான மீதமுள்ள ரூ.3.00 இலட்சம் நிதியினையும் அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று விரைவில் அக்குடும்பத்தாருக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161